பலனிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும்
பனஞெருவ னுக்கு நிகரோ [விற்
வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொ
வடிவேல் அணிந்த முருகா [ன்றில்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 53

அருமை யறிதல்

மணமாலை அருமையைப் புனைபவர்களேய
மட்டிக் குரங் கறியுமோ [றிவர்
மக்களுடை அருமையைப் பெற்றவர்களே
மலடிதான் அறிவ துண்டோ [யறிவர்
கணவருடை அருமையைக்கற்பானமாதறி
கணிகையா னவள் அறிவளோ [வள்
கருதுமொரு சந்தியின்பாண்டமென்பதை
களவான நாயறியு மோ [வருங்
குணமானகிளியருமை தனைவளர்த் தவரறி
கொடியபூனையும் அறியுமோ [வர்
குலவுபெரி யோரருமை நல்லோர்களே
கொடுமூடர் தாமறிவ ரோ [யறிவர்
மணவாள நீயென்று குறவள்ளி பின்தொ
வனமூடு தழுவும் அழகா [டர

மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே. 54

தீச்சார்பாற் பயன்படாதவை

மடுவினில்கஞ்சமலர்உண்டொருவர்அணு
வன்முதலை அங்கிருக்கும் [காமல்
மலையினில் தேனுண்டு சென்றொருவர் கிட்
மருவியதில் வண்டிருக்கும் [டாமல்
நெடுமைதிகழ் தாழைமலர் உண்டொருவர்
நீங்காத முள்ளிருக்கும்[அணுகாமல்
நீடுபல சந்தன விருக்ஷமுண் டணுகாது
நீளரவு சூழ்ந்திருக்கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினில் செல்லா
குரைநாய்க ளங்கிருக்கும் [து
கொடுக்குந் தியாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி உண்டு கண்டாய்
வடிவையுங் கடிவையும் பொருவுமிரு கண்
வள்ளிக் குகந்த கணவா [ணிகுற
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே. 55

வேசையர் இழிவு

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்
புனைமலர் படுக்கை வீடு [டை
பொன்வாசல்கட்டில்பொது அம்பலம்உடு
பொருவில்சூதாடு சாலை [த்ததுகில்
மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்
விழிமனங் கவர்தூண்டி லாம் [து
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோக
மின்னலிரு தொடை சர்ப்பமாம்[மொரு
ஆவலா கியஅல்கு லோதண்டம் வாங்கு
அதிகபட மாமனது கல் [மிடம்

அமிர்தவா யிதழ்சித்ர சாலைபெச் சிற்குழி
அவர்க்காசை வைக்க லாமோ
மாவடிவு கொண்டே ஒளித்தவொரு சூர
வதைத்தவடி வேலா யுதா [னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 56

கலிகாலக் கொடுமை

தாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் கால
தந்தையைச் சீறு காலஞ் [மயர்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கட
சற்றுமெண் ணாத காலம் [வுளச்
பேய்தெய்வ மென்றுப சரித்திடுங் காலம்
புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட் டியையினுங் கேட்கின்றகாலம்
நற்பெரியர் சொல்கொளாத காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு கால
சிறியவன் பெருகு காலம் [மிகு
செருவில்விட் டோடினோர்வரிசைபெறுகா
வசைசெப்புவோர்க் குதவுகாலம்[லம்
வாய்மதம் பேசிவிடும் அனியாயக்காரர்க்கு
வாய்த்தகலி காலம் ஐயா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 57

அவரவர்க்கு உரியவை

கல்வியொடு கனமூறச் சபையின்மேல் வட்
காணவைப் போன் பிதாவாம் [டமாக்
கற்றுணர்ந்தே தனது புகழால் பிதாவைப்
காசஞ் செய்வோன் புத்திரன் [ர

செல்வமிகு கணவனே தெய்வமென் றனு
சிந்தைசெய் பவள் மனைவியாம்[தினஞ்
சினேகிதன் போலவே அன்புவைத் துண்
செப்புமவ னேசோ தரன்[மைமொழி
தொல்வளமிகுந்தநூற் கரைதெரிந்துறுதி
சொல்லுமவ னேகுரவ னும் [மொழி
சொன்னநெறி தவறுமல் வழிபாடு செய்து
துய்யனே இனிய சீஷன் [வரு
வல்விரக மிஞ்சுசுர குஞ்சரி உடன்குறவர்
வஞ்சியை மணந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 58

சிறுமையிற் பெருமை

சேற்றில் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக் குந்
திகழ்சிப்பி உடலில் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக் கும்
போற்றியிடு பூச்சியின் வாயின்நூல் பட்
பூசைக்கு நேச மாகும் [டென்று
புகலரிய வண்டெச்சி லானதேன் தேவர்
புனிதஅபி டேக மாகும் [கொள்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவா துபுழு கனைவர்க்கு மாம்
சாதியீ னத்தில் பிறக்கினுங் கற்றோர்கள்
சபையின்மேல் வட்டம் அன்றோ
மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர்
வைத்தமெஞ் ஞான முதலே [ர
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 59

செய்நன்றி மறவாமை

தான்ஆ சரித்துவரு தெய்வமிது என்று
சத்தியஞ் செயல்விடாது [பொய்ச்
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தாலது சுடும்
ஆனாலும் மேலவர்கள் மெத்தவுந் தனதென்
றடாதுசெய்யிற் கெடுதியாம் [ன்
ஆனைதான் மெத்தப் பழக்கமா னாலுஞ்செ
யாதுசெய் தாக்கொன் றிடும்
தீனை தினிதென்று மீதூண் விரும்பினால்
தேகபீ டைகளே தருஞ்
செகராசர் சனுவென்ன ஏலாத காரியம்
செய்தால் மனம்பொருர் காண்
வானாடு புகழுமொரு சோணாடு தழையஇவ
வந்தவ தரித்த முதலே [ண்
டமயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 60

நடுவு நிலைமை

வந்தவிவ காரத்தி லினியபரி தானங்கள்
வருமென்றும் நேச ரென்றும்
வன்பகைஞ ரென்றும்அய லோரென்றும்
வானென்றும்ஏழையென்றும்[மிக்கதன
இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாத
மெள்ளள வுரைத் திடாமல் [மோர்
எண்ணமுட னேலிகிதபுத்தியொடு சாக்ஷிக்
ஏற்கச்ச பாச மதமாம் [கும்
முந்தஇருதலையுஞ் சமன்செய்த கோல்போ
மொழிந்திடில் தர்மமது காண் [ல்
முனைவீம னுடல்பாதி மிருகந் தனக்கென்
மூன்தருமர் சொன்ன தலைவோ [று

மைந்தனென அன்றுமை முலைப்பால் கொ
வளர்ந்தருள் குழந்தை வடிவே [டுத்திட
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 61

பக்ஷி பாதம்

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்
துரைப்போர் மலைக்குரங் காம்
உயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடும்
உறையுமூர்பாழ் நத்த மாம்[அவரில்லம்
தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலைபோ
சமானமா எழுபிறப் புஞ் [லுகுஞ்
சந்ததியி லாதுழல்வர் அவர்முகத் தினின்
தையமேல குடியி ருப்பாள் [மூத்த
பாரமிவ ரென்றுபுவி மங்கையும் நடுங்கு
பழித்ததுர் மரண மாவார் [வாள்
பகர்முடிவி லேரவுர வாதிநர கத்தனு
பவிப்பரெப் போது மென்பார்
வாரமுடன் அருணகிரி நாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள் குருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 62

ஒன்றிலாமையாற் சிறவாதவை

கொங்கையில் லாதவட் கெத்தனைப் பணியு
கூடினும் பெண்மை யில்லை [டைமை
கூறுநிறை கல்வியில் லாமலெத் தனைகவி
கூறினும் புலமை யில்லை [தை
சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந்
தரிக்கினுங் கனதை யில்லை
சட்சுவை பதார்த்தவகை உற்றாலும் நெய்
சாதமுந் திர்த்தி யில்லை [யிலாச்

பங்கயம் இலாமலைத் தனைமலர்கள் வாவி
பாரித்தும் மேன்மை யில்லை [யில்
பத்தியில் லாமல்வெகு நியமமாய் அர்ச்ச
பண்ணினும் பூசை யில்லை [னைகள்
மங்கையர் இலாமனைக் கெத்தனை அருஞ்
வரினுமில் வாழ்க்கை யில்லை [செல்வம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 63

அளவு படாதவை

வாரிஆழத்தையும்புனலெறியும் அலைகளை
மானிடர்கள் சனனத்தை யும் [யும்
மன்னவர்கள் நினைவையும்புருஷர்யோகங்
வானின்உயர் நீளத்தை யும்[களையும்
பாரிலெழு மணலையும் பலபிராணிகளையும்
படியாண்ட மன்னவரை யும்
பருப்பதத் தின்நிரையும் ஈசரச் செயலையும்
பனிமாரி பொழிதுளியை யும்
சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழுகவியையு
சித்தர்தம துள்ளத்தை யும் [ஞ்
தெரிவையர்கள் சிந்தையையும் இவ்வள
தெரிந்தள விடக்கூடுமோ [வெனும்படி
வாரிசமடந்தைகுடி கொண்டநெடுமாலுக்
மருகனென வந்த முருகா [கு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 64

பிறர்மனை நயத்தல்

சுந்தாரம் அன்றியே பரதாரமேல்நினைவு
தனைவைத்த காமுகர்க்குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமில்லை சமரி
தைரியஞ் சற்று மில்லை [னில்

அந்தார மில்லைதொடர் முறையில்லை நிலை
அறிவில்லை மரபு மில்லை [யில்லை
அறமில்லை நீதியில்லை ஓரவினில் தனிவ
கச்சமோ மனதி லில்லை [ழிக்
நந்தாத சனமில்லை இனமில்லைஎவருக்கும்
நட்பில்லை களைதை யில்லை [திபெறும்
நயமில்லைஇளமைதனில் வலிமையிலைமூத்
ஞானமிலை என்பர் கண்டாய்
மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி
மார்பனே அருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 65

மானம் விடாமை

கனபாரம் ஏறில் பிளந்திடுவ தன்றியே
கல்தூண் வளைந்தி டாது
கருதலர்க ளாலுடைந் தாலும்உயிர் அள
கனசூரன் அமரில் முறியான் [விலே
தினமோர் இடுக்கண்வந் துற்றாலும் வேங்
சீவனள விற்கொ டாது [கைதோல்
திரமானபெரியோர் சரீரங்கள்போகினுஞ்
செப்புமுறை தவறி டார்கள்
வனமேறு கவரிமான் உயிர்போகும் அள
மயிரினென் றுங்கொ டாது [வுந்தன்
வாராத ஆபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறி நடவாள்
மனதார உனதடைக் கலமென்ற கிரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 66

திருவருட் சிறப்பு

திருமகள் கடாக்ஷமுண் டானல் எவர்க்குஞ்
சிறப்புண்டு கனதை யுண்டு [விடுஞ்
சென்றவழி எல்லாம் பெரும்பாதை ஆய்
செல்லாத வார்த்தை செல்லும்
பொருளொரு துரும்புமரி யாதையாஞ்செ
புகல்பெருக் காறு போலாம் [ல்வமே
புவியின்முன் கண்டுமதி யாதபேர் பழகின
போலவே நேசம் ஆவார் [வர்
பெருமையொடு சாதியில் உயர்ச்சிதரும் அ
பெரும்ப்ர திஷ்டை உண்டாம் [னுதினம்
பிரியமொடு பகையாளி கூடஉற வாகுவான்
பேச்சினில் பிழை வராது [அதிக
வருமென நினைத்தபொருள் கைகூடி வரும்
வல்லமைகள் மிகவும் உண்டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 67

நட்பு நிலை

கதிரவன் உதிப்பதெங் கேநளினம் எங்கே
களித்துள மலர்ந்த தென்ன
கார்மேகம் எங்கே பசுந்தோகை எங்கே
கருத்தில்நட் பான தென்ன
மதியம்எங் கேபெருங் குமுதம்எங் கேமுக
மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன
வல்இரவு விடிவதெங் கேகோழி எங்கே
மகிழ்ந்துகூ விடுதல் என்ன [ளொடு
நிதியரசர் எங்கேயிருந்தாலும் அவர்க
நேசமொன் றாயி ருக்கும்
நீதிமிகு நல்லோர்கள் எங்கிருந் தாலும்
நிறைபக்ஷம் மறவார்கள் காண் [அவர்

மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவு சோணாட டதிபனே [மு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 68

காலம் அறிதல்

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக்
கனகமுடி அரசர் தாமுங்
கருதுசய காலமது கண்டந்த வேளையில்
காரிய முடித்து விடுவார் [ப
மேகமுங் கார்காலம் அதுகண்டுபயிர்விளை
மேன்மேலு மாரி பொழியும் [தில்
மிக்கான அறிவுளோர் வருதருண காலத்
மிடியாள ருக்குதவு வார்
நாகரிகம் உறுகுயில் வசந்தகா லத்திலே
நலமென் றுகந்து கூவும் [த
நல்லோர் குறித்ததைப் பதறுமல் அந்தந்
நாளையில் முடிப்பர் கண்டாய்
வாகனைய காலைகல் மாலைபுல் எனும்உலக
வாடிக்கை நிசம்அல்ல வோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 69

இடன் அறிதல்

தரையதனில் ஓடுதேர் நீள்கடலில் ஓடுமோ
சலதிமிசை ஓடு கப்பல் [லை
தரைமீதில் ஓடுமோ தண்ணீரில் உறுமுத
தன்முன்னே கரி நிற்குமோ [வெல்ல
விரைமலர் முடிப்பாமர் வேணிஅர வினை
மிகுகருட னுலா குமோ [சாமல்
வேங்கைகள் இருக்கின்ற காடுதனில் அஞ்
வேறொருவர் செல்ல வசமோ

துரைகளைப்பெரியோரை அண்டிவாழ்வோ
துஷ்டர்பகை என்ன செய்யுந் [ர்தமைத்
துணைகண்டு சேரிடம் அறிந்துசேர் என்
சொன்னகதைபொய்யல்லவே [றெளவை
வரைஊது மாயனை அடுத்தலால் பஞ்சவர்
வன்போர் செயித்த தன்றோ [கள்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 70

யாக்கை நிலையாமை

மனுநல்மாந் தாதாமுன் ஆனவர்கள் எல்
மண்மேல் இருந்து வாழ்ந்து [லாரும்
மடியா திருந்தபேர் இல்லை அவர் தேடிய
வாரிவைத் தவரு மில்லை [தை
பணியதனை நம்பியே ஏர்பூட்டு கதையென
பாழான உடலை நம்பிப் [ப்
பார்மீதில் இன்னம்வெகு நாளிருப் போம்
பல்கோடி நினைவை எண்ணி [என்று
அனிதமாய் விருதாவில் மாய்வதே அல்
அன்பாக நின்பதத் தை [லாமல்
அர்ச்சித்துமுத்திபெறல் வேண்டுமென்றெ
ஆசைவலை யிற்சுழலுவார் [ண்ணார்கள்
வனிதையர்கள் காம விகாரமே பகையாகு
மற்றுமொரு பகைமை உண்டோ [ம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 71

வேட்டகத் திகழ்ச்சி

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடும்
மேன்மேலும் உப சரித்து [அளவில்
விருந்துகள் சமைத்துநெய்பால்தயிர்பதார்
வேண்டுவ எலாம் அமைப்பார் [த்தவகை

ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவார் தை
டுறுதியாய் முழுகுவிப் பார் [லமிட்
ஓயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ
உற்றநாள் நாலாகி லோ [ர்
நாட்டம்ஒரு படிஇறங் குவதுபோல் மரியா
நாளுக்குநாள் குறைவு றும் [தை
நகைசெய்வர்மைத்துனர்கள் அலுவல்பார்
நாணுமல் மாமி சொல்வாள்[போஎன்று
வாட்டமனை யாளொரு துரும்பாய் மதிப்ப
மட்டியினும் மட்டி அன்றோ [ள் அவன்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 72

செல்வம் நிலையாமை

ஓடமிடும் இடமது மணல்சுடுஞ் சுடுமிடமு
ஓடமிக வேநடக் கும் [ம்
உற்றதோர் ஆற்றின்மடு மேடாகும் மேடெ
உறுபுனல்கொள் மடுவா யிடும் [லாம்
நாடுகா டாகும்உயர் காடுநா டாகிவிடும்
நவில்சகடு மேல்கீழ தாய்
நடையுறுஞ் சந்தைபல கூடும்உட னேகலை
நல் நிலவும் இருளாய் விடும் [யும்
நீடுபகல் போயபின் பிரவாகும் இரவுபோ
நிறைபகல் போதாய் விடும் [ய்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்
நிசமல்ல வாழ்வு கண்டாய் [திடுவர்
மாடுமனை பாரிசனம் மக்கள்நிதி பூஷணமு
மருவுகன வாகும் அன்றோ [மு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 73

பிறந்தாற் பெறுபேறு

சடமென் றெடுத்தால் புவிக்குநல் லவனெ
  தன்பேர் விளங்க வேண்டும் [ன்று
சதிருடன் இல்லாது மெஞ்ஞானி என்றவ
  தரிக்கவே வேண்டும் அல்லால்
திடம்இனிய ரணசூர வீரனிவன் என்ன
  திசைமெச்ச வேண்டும் அல்லால்[வே
தேகியென வருபவர்க் கில்லையென் னுமலே
  செய்யவே வேண்டும் அல்லால்
அடைவுடன் பலகல்வி ஆராய்ந்து வித்து
  ஆகவே வேண்டும் அல்லால் [வான்
அறிவால் துரைமக்கள் ஆகவர வேண்டும்
  அதிகபூ பாலர் ஐயா [இவர்
வடகுவடு டுிடுிடென எழுகடலும அலை
  மணிஉரகன் முடிகள் நெரிய[யெறிய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
  மலைமேவு குமரேச னே. 74

வேசை நிந்தை

தேடித்தம் வீட்டில் பணக்காரர் வந்திடில்
  தேகசீ வன்போல வே
சினேகித்த உம்மையொரு பொழுதுகா ணு
  செல்லுமு தன்னம் என்றே [விடில்
கூடிச் சுகிப்பரென் ஆசையுன் மேலென்று
  கூசாமல் ஆணை இடுவார்
கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்
  கொடுப்பர்சும் பனம் உகப்பர் [திதழ்
வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின்
  வேறுபட நிந்தை செய்து
விடவிடப் பேசுவர் தாய்கலக மூட்டியே
  விட்டுத் துரத்தி விடுவார்

வாடிக்கை யாய்இந்த வண்டப் பாத்தையர்
மயக்கத்தை நம்ப லாமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 75

இதற்கு இது உறுதியெனல்

கைக்குறுதி வேல்வில் மனைக்குறுதி மனை
கவிக்குறுதி பொருளடக் கம் [யாள்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்
கண்டிடில் சத்ய வசனம் [குறுதி
மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வ
வேசையர்க் குறுதி தேடல் [சனம்
விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதி
வீரருக் குறுதி தீரம் [ஊண்
செய்க்குறுதி நீர்அரும் பார்க்குறுதி செங்
செழும்படைக் குறுதி வேழம் [கோல்
செல்வந் தனக்குறுதிபிள்ளைகள் நகர்க்குறு
சேர்ந்திடுஞ் சர்ச்ச னர்களாம் [தி
மைக்குறுதி யாகிய விழிக்குற மடந்தைசுர
மங்கைமரு வுந்தலைவ னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 76

வறுமையிற் சிறுமை

வறுமைதான் வந்திடில் தாய்பழுது சொல்
மனையாட்டி சற்றும் எண்ணாள் [லுவாள்
வாக்கில் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்
வசனமாய் வந்து விளையும் [லாத
சிறுமையொடு தொலையா விசாரமே அல்
சிந்தையில் தைரிய மில்லை [லாது
செய்பசபை தன்னிலே சென்றுவர வெட்க
செல்வரைக் காணில் நாணும் [மாம்

உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்து
உயிருடன் செத்த பிணமாம் [வரில்
உலகம் பழித்திடும் பெருமையோர் முன்பு
ஒருவரொடு செய்தி சொன்னால் [சென்
மறுவசன முஞ்சொலார் துன்பினில் இன்
வந்தணுகி டாதருளு வாய் [பம்இது
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 77

தீச்சார்பால் நன்மை இழப்பு

ஆனைதண் ணீரில்நிழல் பார்த்திடத் தவ
றங்கே கலக்கி உலவும் [ளைசென்
ஆயிரம் பேர்கூடி வீடுகட் டிடில்ஏதம்
அறைகுறளு முடனே வரும் [ளவில்
ஏனைநற் பெரியோர்கள் போஜனஞ் செயும
ஈக்கிடந் திசைகேட தாம் [ற்
இன்பமிகு பசுவிலே கன்றுசெல் றூட்டுதே
கினியகோன் அதுதடுக் கும் [ஞ்
சேனைமன் னவரென்ன கருமநிய மிக்கினு
சிறியோர் களால் குறைபடுஞ் [மை
சிங்கத்தை யும்பெரிய ரிஷபத்தை யும்பகை
செய்ததொரு நரியல் லவோ [ணி
மானையுந் திகழ்தெய்வ யானையுந் தழுவும
மார்பனே அருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 78

இடையூறுற்றும் பயன்படுபவை

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலும் ஊற்றுநீ
அமுதபா லங்கொடுக் கும் [ர்
ஆதவனை ஒருபாதி கட்செவி மறைத்தாலும்
அப்போதும் உதவி செய்வன் [ம்

கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினு
குவலயத் திருள்சி தைக்கும் [ங்
கொல்லேதான் சாவிபோய் விட்டாலும் அ
குருவிக்கு மேய்ச்சல் உண்டு [ங்குவரு
வீறுடன் உதாரிதான் மிடியானபோதினி
மிகநாடி வருப வர்க்கு [லு
வேறுவகை இல்லையென் றுரையா தியன்
வியந்துள மகிழ்ந்து தவுவான் [றன
மாறுபடு சூரசங் காரகம் பீரனே
வடிவேல் அணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலேமேவு குமரேச னே. 79

இன்னவர்க்கு இது இல்லையெனல்

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாபம் ஏது
தயைஇலா தவர்தமக் குறவேது பணமிலா
தார்க்கேது வேசை உறவு
ஊர்இலா தவர்தமக் காசேது பசிவேளே
உண்டிடார்க் குறுதி நிலையேது
உண்மையில் லாதவர்க் கறம்ஏது முபல்வி
குறுவதொரு செல்வம் ஏது [லார்க்
சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமே
சுகமிலார்க் காசை ஏது [து
துர்க்குணம் இலாதவருக் கெதிராளி யேது
துஷ்டர்க் கிரக்கம் ஏது [இடர்செய்
மார்புருவ வாலிமேல் அஸ்திரம் விடுத்த
மால்மருக னை முருகா [நெடு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலேமேவு குமரேச னே. 80

இதினும் இது நன்றெனல்

பஞ்சரித் தருமையறி யார்பொருளை எய்த
பலர்மனைப் பிச்சை நன்று [வில்
பரிவாக உபசாரம் இல்லா விருந்தினில்
பட்டினி இருக்கை நன்று
தஞ்சமொரு மூயலைஅடு வென்றிதனில் யா
சமர்செய்து தோற்றல் நன்று [னையொடு
சரசகுணம் இல்லாத பெண்களைச் சேர்தலி
கன்னியா சித்தல் நன்று [ற்
அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனி
அரவினொடு பழகுவது நன்று [ல்
அந்தணர்க் காபத்தில் உதவா திருப்பதனி
ஆருயிர் விடுத்தல் நன்று [ல்
வஞ்சகர் உடன்கூடி வாழ்தலில் தனியே
வருந்திடுஞ் சிறுமை நன்று
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 81

நிலையாதவை

கொற்றவர்கள் ராணுவமும் ஆறுநேர் ஆகி
குளங்களும் வேசை உறவுங் [ய
குணம்இலார் நேசமும் பாம்பொடு பழக்க
குலவுநீர் விளையா டலும் [முங்
பற்றலார் தமதிடை வருந்துவிசு வாசமும்
பழையதா யாதி நிணறும்
பரதார மாதரது போகமும் பெருகிவரு
பாங்கான ஆற்று வரவும்
நத்துமொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேரு
நல்லமத யானை நட்பும் [றவும்

நாவில்நல் லுறவுமொரு நாள்போல் இரா
நம்பப் படாது கண்டாய் [திவைகள்
மற்றும்ஒரு துணைஇல்லை நீதுணைஎ னப்ப
வானவர்கள் சிறைமீட்ட வா [ரவும்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 82

நற்புலவர் தீப்புலவர் செயல்

மிக்கான சோலையில் குயில்சென்று மாங்க
விருப்பமொடு தேடி நாடும் [னி
மிடைகருங் காகங்கள் எக்கனி இருந்தாலு
வேப்பங் கனிக்கு நாடும் [ம்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினில்
இருக்கின்ற தேனை நாடும்
எத்தனை சுகந்தவகை உற்றாலும் உருள்வ
டினந்தூர் மலத்தை நாடும் [ண்
தக்கோர்பொருட்சுவை நயங்கள்எங்கேயெ
தாய்பார்த் துகந்து கொள்வார் [ன்று
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேஎன்
தமிழில் ஆராய்வர் கண்டாய் [று
மைக்காவி விழிமாது தெய்வானை யுங்குறவ
வள்ளியுந் தழுவு தலைவா [ர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 83

தாழ்தற் பெருமை

வேங்கைகள் பதுங்குதலும் மாமுகில் ஒது
விரிசிலை குனிந் திடுதலும் [ங்குதலும்
மேடம தகன்றிடலும் யானைகள் ஒடுங்குத
வெள்விடைகள் துள்ளி விழலும் [லும்

மூங்கில்கள்வணங்குதலும் மேலவர் இணங்
முனிவர்கள் நயந்துகொளலும்[குதலும்
முதிர்படைஒதுங்குதலும்வினையர்கள் அட
முதலினர் பயந் திடுதலும்[ங்குதலும்
ஆம்கரவு சாய்குதலும் மகிழ்மலர் உலர்ந்
ஆயர்குழல் சூடு படலும் [திடலும்
அம்புவியில் இவைகாரி யங்களுக் கல்லா
அதனல் இளைப்பு வருமோ [மல்
மாங்கனிக் கா அரனை வலமது புரிந்துவள
மதகரிக் கிளைய முருகா [ர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 84

தெய்வச் செயல்

சோடாப் மரத்தில் புருரெண் டிருந்திடத்
துறவுகண் டேவே டுவன்
தோலாமல் அவையெய்ய வேண்டுமென்
தொடுத்துவில் வாங்கி நிற்க[ருகனை
ஊடாடி மேலே எழும்பிடில் அடிப்பதற்
குலவுரா சாளி கூட [து
உயரப் பறந்துகொண் டேதிரிய அப்போ
உதைத்தசிலை வேடன் அடியில்
சேடாக வல்விடந் தீண்டவே அவன்விழ
சிலையில் தொடுத்த வாளி [ச்
சென்றிரா சாளிமெய் தைத்துவிழ அவ்வி
சிறைப்புரு வாழ்ந்த அன்றோ [ரு
வடாமல் இவையெலாம் சிவன்செயல்கள் அல்லாதுன்
மனச்செயலினலும்வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 85

பாடல் இயல்பு

எழுத்தசைகள் சீர்தளைகள் அடிதொடைக
திருக்கவே வேண்டும் அப்பா[ள்சிதையா
ஈரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளப
பினியசொற் கமைய வேண்டும் [ளப்
அழுத்தமிகுகுறளினுக் கொப்பாகவேபொ
அடக்கமு மிருக்க வேண்டும் [ருள்
அன்பான பாவினம் இசைந்துவரல் வே
அலங்காரம்உற்றதுறையில்[ண்டும்முன்
பழுத்துளம் உவந்தோசை உற்றுவரல் வே
படிக்கும் இசைகூடல்வேண்டும்[ண்டும்
பாங்காக இன்னவை பொருந்திடச் சொற்க
பாடிற் சிறப்பென்பர் காண் [விதை
மழுத்தினஞ் செங்கைதனில் வைத்தகங்கா
மைந்தனென வந்த முருகா[ளன்அருள்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 86

விபூதி வாங்கும் முறைமை

பரிதனில்இருந்தும்இயல்சிவிகையில்இரு
பலகையில்இருந்தும்மிகவே[ந்தும்உயர்
பாங்கான அம்பலந் தனிலே இருந்தும்
பருத்ததிண் ணையிலி ருந்தும்
தெரிவொடுகொடுப்பவர்கள் கீழ்நிற்கமேல்
திருநீறு வாங்கி இடினுஞ் [நின்று
செங்கையொன் றுலும்விரல் மூன்றுலும்
திகழ்தம் பலத்தி னேடும்[வாங்கினுந்
அரியதொரு பாதையில் நடக்கின்றபோதி
அசுத்தநில மான அதிலும் [லும்

அங்கே தரிக்கிலுந் தந்திடில் தள்ளினும்
அவர்க்குநர கென்பர் கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்துமகிழ் சக நாதனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 87

விபூதி தரிக்கும் முறைமை

பத்தியொடு சிவசிவா என்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெ டுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவி
பருத்தபுய மீது ஒழுக [யொடு
நித்தமும் விரல்களால் நெற்றியில் அழுந்
நினைவாய்த் தரிப்ப வர்க்கு [தலுற
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமாம்
நீங்காமல் நிமலன் அங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்தி
தாண்டவஞ் செய்யுந் திரு [லே
சஞ்சலம் வராதுபர கதியுதவும் இவரையே
சத்தியுஞ் சிவனென்ன லாம்
மத்தினிய மேருஎன வைத்தமு தினைக்
மால்மருக னை முருகா [கடையு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 88

இவ் உறுப்பால் பயன்இல்லெனல்

தேவால யஞ்சுற் றிடாதகால் என்னகால்
தெரிசியாக் கண்என்ன கண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதான் என்ன சிந்தை

மேவாக மஞ்சிவ புராணம் அவை கேளாம
விட்டசெவி என்ன செவிகள் [ல்
விமலனை வணங்காதசென்னிஎன் சென்னி
விடைசெயாக் கைஎன்ன கை [பணி
நாவார நினையேத் திடாதவாய் என்னவா
நல்தீர்த்த மூழ்கா உடல் [ய்
நானிலத் தென்னஉடல் பாவியா கியசனன
நண்ணினல் பலனேது காண் [ம்
மா ஆகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
வடிவேலை விட்ட முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 89

நற்பொருளோடு தீப்பொருள் பிறத்தல்

கோகனக மங்கையுடன்மூத்தவள் பிறந்தெ
குலவும் ஆட்டின்கண் அதர்தான் [ன்ன
கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி உற்றும் என்ன
மாகர்உ ணும் அமுதினெடு நஞ்சம் பிறந்
வல்லிரும் பில்துருத் தான் [தென்ன
வந்தேபிறந்தென்ன நெடுமரந் தனில்மொ
வளமொடு பிறந்தென்ன உண் [க்கு
பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்
பன்னுமொரு தாய் வயிற்றில்[தென்ன
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்
பலனேதும் இல்லை யன்றோ[தென்ன
மாகனகமேருவைச் சிலைஎனவளைத்தசிவன்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 90

தன் இனத்தால் அழிவு

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
கூரிரும் புகளை வெல்லும்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்து
கோத்திரம் எலாம் அழிக்கும் [தன்
நலமான பார்வைசேர் குருவியா னதுவந்
நண்ணுபற வைகளை ஆர்க்கும் [து
நட்புடன் வளர்ந்தகலை மானென்று சென்
நவில்சாதி தனையி ழுக்கும் [றுதன்
உலவுநல் குடிதனில் கோளர்கள் இருந்து
நிற்றுரை ஈட ழிப்பர் [கொண்
உளவனில் லாமலூர் அழியா தெனச்சொ
உலகமொழி நிசம் அல்லவோ [ல்லும்
வலமாக வந்தர னிடத்தினிற் கனிகொண்
மதயானை தன்சோ தரா [ட
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 91

வீணுக்கு உழைத்தல்

குயின்முட்டை தனதென்று காக்கைஅடை
குணம்போலும்ஈக்கள் எல்லாங்[காக்குங்
கூடியே தாம்உண்ண வேண்டுமென் றே
கூடுய்த்த நறவு போலும் [தினங்
பயில்சோர ருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
பாலனென் றுட்கருதி யே
பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்த்திடு
பண்பிலாப் புருடர் போலும் [ம்
துயிலின்றி நிதிகளைத் தேடியே ஒருவர்பா
தொட்டுத் தெரித்தி டாமல் [ல்

தொகைபண்ணிவைத்திடுவர்கைக்கொண்டு
சொந்தமா னவர்வேறு காண்[போகவரு
வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
வானவர்க் குதவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 92

இது சேரின் இது பயன்படாது எனல்

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கா
ஆற்றிற் கரைத்த புளியும் [ன
அரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும்வரு
அலைகடற் கிடு பூசையும் [ம்
சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்
சொரிநறும் பனிநீரும் நீள் [மணற்
சொல்லரிய காட்டுக் கெரித்தநில வுங்கடல்
சுழிக்குளே விடு கப்பலும் [ல்
விழலுக் கிறைத்திட்ட தண்ணீரும் மூகமா
வேசைக் களித்த பொருளும் [ய
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதாஇ தென்பர் கண்டாய்
மழலைப் பசுங்கிள்ளை முன்னைமலை மங்கை
வண்ணக் குழந்தை முருகா [தரு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 93

கைவிடத் தகாதவர்

அன்னைசுற் றங்களையும் அற்றைநாள் முத
அடுத்துவரு பழையோ ரையும் [லா
அடுபகைவ ரில்தப்பி வந்தஒரு வேந்தனை
அன்பான பெரியோ ரையும் [யும்

தன்னை நம் பின்னையும் ஏழையா னவரையு
சார்ந்தமறை யோர்தம் மையும் [ஞ்
தருணம்இது என்று நல் லாபத்து வேளையி
சரணம் புகுந்தோ ரையும் [ல்
நன்னயம தாகமுன் உதவிசெய் தோரையு
நாளுந் தனக்குறுதி யாய் [ம்
நத்துசே வகனையுங் காப்பதல் லாதுகை
நழுவவிடல் ஆகாது காண்
மன்அயி லும் இனியசெஞ் சேவலுஞ் செங்
வைத்தசர வணபூ பனே [கைமலர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 94

தகாத செயல்

அண்டிவரும் உற்றார் பசித்தங் கிருக்கவே
அன்னியர்க் குதவு வோரும்
ஆசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டு
அற்பரை அடுத்த பேரும் [ப்பின்
கொண்டஒரு மனையாள் இருக்கப் பரத்தை
கொண்டாடி மருவு வோரும் [யைக்
கூறுசற் பாத்திரம் இருக்கமிகு தானமது
குணம் இல்லார்க் கிய்ந்த பேரும்
கண்டுவரு புதியோரை நம்பியே பழைய
கைவிட் டிருந்த பேரும் [ரைக்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியாதை காண்
வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி
மார்பனே அருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 95

நல்லோர் முறை

கூடியே சோதரர்கள் வாழ்தலா லும்தகு
குழந்தைபல பெறுத லாலும்
குணமாக வேபிச்சை இட்டுண்கை யாலும்
கொளும்பிதிர்க் கிடுத லாலும்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலும்
தியாகங் கொடுத்த லாலும்
சிறியோர்கள்செய்திடும் பிழையைப்பொறு
சினத்தைத் தவிர்த்த லாலும் [த்துச்
நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலுமிக
நல்வார்த்தை சொல்ல லாலும்
நன்மையே தருமலால் தாழ்ச்சிகள் வாரா
நல்லோர்கள் செயுமுறைமை காண்[வை
வாடிமன நொந்துதமிழ் சொன்னநக்கீரன்
வந்துதவி செய்த முருகா [முன்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே. 96

அடைக்கலங் காத்தல்

அஞ்சலெனு நாயினுடல் தருமன் சுமந்து
ஆற்றைக் கடத்து வித்தான் [முன்
அடைக்கலம் எனுங்கயற் காகநெடு மாலு
அருச்சுனன் சமர் புரிந்தான் [டன்
தஞ்சமென வந்திடு புறவுக்கு முன்சிபி
சரீரந் தனைக்கொ டுத்தான்
தடமலைச் சிறகரிந் தவனை முன் காக்கத்
ததீசி முது கென்பளித் தான்
இன்சொலுட னேபூத தயவுடையர் ஆயி
எவருக்கும் ஆபத்தி லே [னோர்,
இனியதஞ் சீவனை விடுத்தாகி லுங்காத்
திரங்கி ரக்ஷிப்பர் அன்றோ

வஞ்...

வளி...
மயிலேறி விளை...
மலைமேவு குமரேச னே.

யோக்கியா யோக்கியம்

பாலினொடுதேன்வந்து சேரில்ருசி அதிக
பருகுநீர் சேரில் என்னும் [மாம்
பவளத்தின் இடைமுத்தைவைத்திடில்சோ
படிகமணி கோக்கில் என்னும் [பிதம்
மேலினிய மன்னர்பால்யானை சேர் வதுகன
மேஷமது சேரில் என்னும் [தை
மிக்கான தங்கத்தில் நவமணி உறிற்பெரு
வெண்கல் அழுத்தில் என்னும் [மை
வாலிபமினுர்களுடன் இளையோர்கள்சேரி
வளைகிழவர் சேரில் என்னும் [ல்நலம்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரில்பிரி
வருகயவர் சேரில் என்னும் [யம்
மாலிகைதரித்தமணி மார்பனே தெய்வா
வள்ளிக்கு வாய்த்த கணவா [னை
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேச னே. 98

பெரியோர் இயல்பு

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல்
ஆபத்தில் வந்த பேருக்கு [வழி நிற்றல்
அபயங் கொடுத்திடுதல் நல்லினஞ்சேர்ந்தி
ஆசிரியன் வழி நின்று அவன்[டுதல்
சொன்னமொழிதவறு து செய்திடுதல்தாய்
துணையடி அருச்சனை செயல்[தந்தை
சோம்பலில்லாமல் உயிர்போகினும் வாய்
தொல்புவியில்நாட்டி இடுதல்[மைமொழி

ருணகிரிநாதர் அருளிய

ந்தரனுபூதி

ரு நாவுக்கரசு

மிழ்) M. A. (வரலாறு) ரையும்

M. LITT. DIP. IN LINGS.

இதன் விலை அணா - 12

நாதர் என்பது இவரது தீக்ஷாநாமம். இ குமாரக் கடவுளையே குருவாகவுந் தெய்வமாக கொண்டவர். இவர் இளமையிற் சிற்றின்பத்தி ன்று பின்னர்த் துறவுபூண்டு சண்முகோப செய்து அதனிற் சித்தியுற்ற நாதரென்னும் ரெய்தி முருகக்கடவுள்மீது மணிப்பிரவாளம் கூறுமாறு தமிழும் ஆரியமுங் கலந்த மொழிகள பல சந்தப்பாக்களையும் விருத்தங்களையும் பாடி மு வேளின் முழுத்திருவருளையும் பெற்றவர். இவ பாடிய நூல்களில் கந்தரனுபூதிக்கு ஓர் உ எழுதி அச்சிட வேண்டுமென்று எண்ணி 100- களுக்கு திரிசிரபுரம் செயின்ட் ஜோசப்ஸ் தமிழாசிரியர் வித்துவான் - R. மீனாக்ஷி பிள்ளை அவர்களால் சிலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக்காட்டியும் சொல்நயம் பெ நயங்களை விளக்கியும் எழுதப்பெற்று சுத்தப் பாய் வெளியிட்டிருக்கிறது.

விலாசம்:

அ. இரங்கசாமிமுதலியார் வ

24, தாண்டவராயபிள்ளைத் தெரு

செ